## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவொற்றியூர்

## O.S. No. 57/2010

இந்நீதிமன்றத்து எழுத்தர் திரு.S.சரவணன், உதவியாளர் அவர்களால் சத்திய பிரமானம் செய்விக்கப்பட்டு வாதி / பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்கு மூலம் 1873 ஆம் ஆண்டு 10-வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2022 ஆண்டு நவம்பர் மாதம் 10-ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

**தேதி - 10.11.2022**

**பெயர் - ஜெயபால்**

**த/பெ - பொன்னைய நாடார்**

**சாட்சி - PW1**

**விசாரணை தொடங்கும் நேரம்- 11:30 A.M**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி-**

6. நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் தற்பொழுது நான் ஓய்வில்தான் உள்ளேன். இதற்கு முன்பு நான் என்ன வேலை செய்தேன் என்றால் சிமென்ட் வியாபாரம் செய்து வந்தேன். அந்த வியாபாரம் அல்லாது வேறு என்ன என்ற வியாபாரம் செய்து வந்தேன் என்றால் செங்கல் மற்றும் மணல் ஆகியவற்றையும் விற்பனை செய்து வந்தேன் அந்த அந்த நேரத்திற்கு தகுந்தாற்போல் எனது வியாபாரத்தை மாற்றிகொள்வது வழக்கம். நான் கட்டை விற்கும் தொழில் செய்து வந்தேன் என்றால் பல வருடங்களுக்கு முன்பு செய்து வந்தேன். நான் ரியல் யஸ்டேட் தொழில் செய்து வந்தேன் என்றால் இல்லை.

7. நான் செய்த தொழிலில் என்னுடன் பங்குதாரர்கள் இருந்தார்களா என்றால் அவ்வப்பொழுது இருந்தார்கள் அதன்பின்பு அவர்கள் சென்றுவிடுவார்கள். சண்முகம் என்பவரை கடத்திவைத்துதாக என்மீது வழக்கு நடந்தாதா என்றால் நடந்ததது அந்த வழக்கில் என் தரப்பில் தீர்ப்பானது. அது சம்மந்தமாக காவல் நிலையத்தில் நான் கொடுத்த சேட்மென்ட் இதுவா என சாட்சியிடம் ஒரு ஆவணத்தை காட்டி கேட்டதற்கு தனக்கு ஞாபகம் இல்லை என தெரிவித்தார். மேற்படி போலிசாரிடம் நான் கொடுத்த வாக்குமூலத்தில் டால்மிய சிமென்ட்

வியாபாரம் மற்றும் நிலங்களை லேஅவுட் செய்து லாபத்திற்கு நான் விற்று வருவதாக நான் தெரிவித்துள்ளேன் என்றால் நான் தெரிவிக்கவில்லை போலிசாரே எழுதி இருப்பார்கள்.

8. தாவா சொத்து உயில் மூலமாக வந்ததாக நான் தெரிவித்த நிலையில் அந்த உயிலினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். எத்தனையாவது ஆணவமாக நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கு தெரியவில்லை. வா.சா.ஆ4ல் பக்கம் 6ல் ஏ அட்டவணை நான்காவது item சொத்தில் புல எண்ணோ விஸ்திரனமோ நான்கு பக்க எல்லைகளோ குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. பட்டாவில் உள்ளது. பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் எனது மனைவி பெயரில் உள்ளது.

9. நான் வா.சா.ஆ4 ஆவணத்தை வைத்துதான் கிரையம் பெற்றேனா அல்ல எனது மனைவி பெயரில் உள்ள பட்டாவை வைத்து கிரையம் பெற்றேனா என்றால் வா.சா.ஆ4ல் எழுத்து பிழை இருக்கலாம் சொத்தை வாங்கிய பிறகே எனது மனைவி பெயரில் பட்டா வழங்கப்பட்டது. எழுத்து பிழை உள்ளதாக நான் கூறும் நிலையில் அதை பிழைத்திருத்தம் செய்யாமல் எனது மனைவி பெயரில் கிரையம் செய்து கொண்டது செல்லாது என்றால் சரியல்ல. புல எண் இல்லாமல் இருக்கும் ஒரு ஆவணத்தை வைத்து நான் கிரையம் செய்தது எவ்வாறு செல்லும் என்றால் அது சரியாக இல்லாமல் இருந்திருந்தால் பட்டா வழங்கியிருக்கமாட்டார்கள். மேற்படி வா.சா-ஆ4ஆன பிரோபேட் உத்தரவு பெற்றபொழுது நான் தாவா சொத்தில்தான் குடியிருந்தேன் என்றும் அதனால் எனக்கு அந்த உத்தரவு குறித்து ஏற்கனவே தெரியும் என்றால் இல்லை உத்தரவு பெற்ற பிறகே தெரியும். எனது மனைவி பெயரில் எந்த வருத்தில் பட்டா பெற்றேன் என்றால் எனக்கு சரியாக நினைவில் இல்லை.

10. நான் மேற்படி இடத்தை வாங்கிய உடன் பிரதிவாதிகளை ஏன் அந்த இடத்தை விட்டு காலிசெய்யும் படி கூறவில்லை என்றால் அவர்கள் தெரிந்த நபர்கள் என்பதால் நான் கூறவில்லை. மேற்படி பிரதிவாதிகளிடம் நான் வாடகை ஏதேனும் வசூல் செய்தேனா என்றால் தெரிந்தவர்கள் என்பதால் வாங்கவில்லை. முனிவேல் எனது நண்பர் என்பதால் எவ்வாறு வாடகை இல்லாமல் சொத்தில் வசிக்க இடம் கொடுத்தேன் என்றால் நான் 9 வருட காலமாக அங்கே இல்லை கிராமத்தில் வசித்து வந்தேன் அவரிடம் காலி செய்யும் படி

கூறியபோதெல்லாம் அவர் காலம் கடத்தி வந்தார் பின்னர் அவர் இறந்துவிட்டார் அவரது பிள்ளைகள் அங்கே வசித்து வந்தனர்.

11. மேற்படி முனிவேலுக்கு எழுத்துபூர்வமான அறிவிப்பு ஏதேனும் காலி செய்யும்படி கூறி அனுப்பியுள்ளேனா என்றால் இல்லை நேரில் பார்க்கும்பொழுது வாய்மொழியாக கூறினேன். வா.சா.ஆ7 2009ல் நான் சொத்து வரி கட்டியதற்கான ரசீது என்றால் ஆமாம். 1992ல் சொத்தினை வாங்கியதாக நான் கூறும் நிலையில் மேற்படி 1992லிருந்து 2009 வரை நான் மேற்படி சொத்திற்கு சொத்து வரி கட்டியதற்கான ரசீதுகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை ஆனால் சொத்து வரி செலுத்தியுள்ளேன்.

12. நான் கிரையம் பெற்ற உடன் பட்டா பெறுவதற்கு கால தாமதம் ஏற்பட்டது அதன் பிறகு சொத்து வரி கணக்கிட்டு நான் செலுத்துவதற்கு 4 அல்லது 5 வருடம் கால தாமதம் ஏற்பட்டது. மேற்படி துரையம்மாள் என்பவருக்கு வாரிசுகள் இல்லை என்றும் நான் அந்த காலக்கட்டத்தில் ரியல் ரஸ்டேட் தொழில் செய்து வந்ததால் அதை பயன்படுத்தி பொய்யான ஆவணங்கள் கொண்டு உயிலினை பிரோபேட் செய்து சொத்தை நான் கிரையம் பெற்றதாக ஆவணங்கள் தயார் செய்துகொண்டேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கினை தாக்ல் செய்தபொழுது தாவா சொத்தின் மதிப்பு சதுரடிக்கு ரூபாய் 220 என நான் எனது வழக்குரையில் தெரிவித்துள்ளேன் என்றால் பதிவு அலுவலகத்தில் வழிக்காட்டி மதிப்பு பெற்று அதன்படியே கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

13. அதற்கான ஆவணங்கள நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தற்பொழுது என்னிடம் கண்பிக்கப்படும் செட்டில்மென்ட ஆவணம் 2010ம் வருடம் தாவா சொத்து அமைந்துள்ள புல எண்.237/1 சன்னதி தெரு, திருவொற்றியூர் என்ற இடத்தில் அமைந்துள்ள சொத்திற்கான ஆவணம் என்றும் அதில் அந்த சொத்தின் சந்தை மதிப்பு ரூபாய் 10 லட்சம் என அந்த ஆவணத்தில் குறிப்பிடபட்டுள்ளது என்றால் சரிதான் அது செட்டில்மென்ட் ஆவணம் என்பதால் அவர் அவர் விருப்பத்திற்கேற்ப மதிப்பினை காட்டியிருக்ககூடும். ஒரு இடத்திற்கு ஏற்படுத்தப்படகூடிய ஆவணமானது அதற்கு முன்பு அந்த இடத்திற்கு என்ன விலை நிர்னயம் செய்யப்பட்டதோ அதே மதிப்பீடுதான்

பதிவு செய்ய இயலும் என்றால் சரியல்ல.

14. வழக்கு சொத்தை அபகரிக்க நான் வழக்கு தாக்கல் செய்தேன் என்றும் மேலும் வழக்கு சொத்தின் மதிப்பை குறைத்து காட்டி இந்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் முறைபடி வழக்கு சொத்தினை கிரையம் பெற்று இருந்தால் 1992லேயே பிரதிவாதிகளின் தந்தையாருக்கு வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்து தாவா சொத்திலிருந்து காலி செய்யும் படி தெரிவித்திருப்பேன் என்றால் சரியல்ல.

15. பிரதிவாதிகள் சுமார் 60 வருட காலமாக தாவா சொத்தில் வசித்து வருகிறார்கள் என்றும் துரையம்மாள் இடம்தான் அவர்கள் வாடகை செலுத்தி வந்தார்கள் என்றால் துரையம்மாள் இறந்த பிறகு அவர்கள் யாரிடமும் வாடகை செலுத்துவதில்லை என்றால் பல வருடங்கள் ஆனதால் எனக்கு சரியாக தெரியவில்லை. எனக்கு எதுவும் தெரியாமல் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல.

**விசாரணை முடியும் நேரம்- 12:25 P.M**

Sd/-Tmt.V.Vannamalar, M.L, PGDIPR, PGD in Crl. & Fr.SC.

**District Munsif, Thiruvottiyur.(FAC), Dated 10.11.2022.**